# அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் - நோர்வே
# தேசிய மட்டத்திலான அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2023
# திருக்குறள் மனனம் ஒப்பித்தல் போட்டி - ஆண்டு 6

பின்வரும் 8 குறள்களை மட்டும் ஒப்பித்தல். குறள்களின் பொருள் விளக்கம் கூறத்தேவையில்லை.

1. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
   அன்றே மறப்பது நன்று. (குறள் 108)

   ஒருவர் செய்த நல்ல செயலை மறக்கக்கூடாது. அவர் செய்த தீய செயலை அப்பொழுதே மறப்பது நன்று.

2. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
   புண்ணுடையர் கல்லா தவர். (குறள் 393)

   கண்ணுடையவர் என்று சொல்வதற்குரியவர் கற்றவரே. கல்லாதவர் தங்களுடைய முகத்தில் இரண்டு புண்களை உடையவராவர்.

3. விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே
   பசும்புல் தலைகாண்பு அரிது. (குறள் 16)

   வானிலிருந்து மழை பெய்யாவிட்டால் இவ்வுலகில் பசுமையான புல்லின் நுனியைக் கூடக் காணமுடியாது.

4. சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
   பெற்றத்தால் பெற்ற பயன். (குறள் 524)

   சுற்றத்தால் தான் சூழப்படும்படி அவர்களைத் தழுவி வாழ்வதே ஒருவன் செல்வத்தைப் பெற்றதன் பயன் ஆகும்.

5. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
   நாட வளந்தரு நாடு. (குறள் 739)

   தன் நாட்டில் வாழும் மக்களுக்கு வேண்டிய செல்வங்களைத் தன்னகத்தே கொண்ட நாடு வளம் நிறைந்த நாடு. பிற நாடுகளின் உதவியை நாடி நிற்கும் நாடு வளம் நிறைந்த நாடாகாது.

6. வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
   கோல்நோக்கி வாழுங் குடி. (குறள் 542)

   உலகத்து உயிர்களெல்லாம் மழையை நோக்கி வாழ்கின்றன. அதுபோல மக்கள் அரசனது நல்லாட்சியை நோக்கி வாழ்கின்றனர்.

7. அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
   தீதின்றி வந்த பொருள். (குறள் 754)

   பொருள் ஈட்டும் வகை அறிந்து பிறருக்குத் தீமை செய்யாது வந்த பொருள் அறத்தையும் கொடுக்கும், இன்பத்தையும் கொடுக்கும்.

8. ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.
மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை.

பொன்றாது நிற்பதொன் றில்.                                        (குறள் 233)

ஒப்பில்லா உயர்ந்த புகழைத் தவிர இவ்வுலகத்தில் அழியாமல் இருப்பது வேறொன்றில்லை.

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.
மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை.